இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
அமைப்புசார் கல்வித் துறை
விஞ்ஞான/கல்வி/தாதியர் பட்டமாணி
மட்டம் - 03
இறுதிப் பரீட்சை - 2025
உங்கள் வேலைகளையும் நபர்களையும் முகாமை செய்தல்- MSU3208/OSU3208

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 29 டிசெம்பர் 2025	நேரம்: பி.ப 1.30 - பி.ப 3.30

அறிவுறுத்தல்கள்

- ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.
- அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளது
- தெளிவான முறையில் விடையளிக்க.

01. a) முகாமைத்துவம் என்றால் என்ன? உங்கள் மொழிநடையில் விளக்குக. (03 புள்ளிகள்)

b) 'இலக்கு' (goals) மற்றும் 'குறிக்கோள்' (objectives) இடையிலான வித்தியாசங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

c) வணிகச் சூழலானது ஒரு வணிக நிறுவனத்தின் மேல் செலுத்தும் தாக்கத்தை ஆராய்க. (06 புள்ளிகள்)

d) ஹென்றி பயோலின் (Henry Fayol) '14 முகாமைத்துவக் கோட்பாடுகள்' ஒரு வினைத்திறனான வணிகச் செயற்பாடுகளுக்கான வழிகாட்டியாகும். அவற்றில் உங்களுக்கு விருப்பமான ஏதேனும் ஐந்து (05) கோட்பாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

02. a) திட்டமிடல் என்றால் என்ன? விளக்குக.. (03 புள்ளிகள்)

b) திட்டமிடலானது மிக முக்கியமானது; எனினும் சில முகாமையாளர்கள் ஏன் அதைச் செய்ய விரும்புவதில்லை? விளக்குக. (06 புள்ளிகள்)

c) ஒரு நிறுவன விளக்கப்படத்தினால் (organizational chart), ஒரு நிறுவனத்திற்கு விளையும் நன்மைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

d) ஜெனுஸ் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் என்பது இலங்கையில் தொழிற்படும் ஒரு நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளராகும். நிறுவனம் விரிவடைந்தபோது, அதன் நிர்வாக ஒருங்கிணைப்பு, செயல்திறன் மற்றும் தீர்மானமெடுப்பதில் சவால்களை எதிர்கொண்டது. செயல்பாடுகளை நெறிப்படுத்த, தலைமை நிர்வாக அதிகாரி பல்வேறு திணைக்களப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்தி நிறுவனத்தை மறுசீரமைக்க முடிவு செய்தார். நீங்கள் ஜெனுஸ் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி என்று வைத்துக்கொள்வோம்; பொருத்தமான நிறுவனத்திற்கு நான்கு (04) திணைக்களப்படுத்தல் முறைகளைப் பரிந்துரைக்கவும். (10 புள்ளிகள்)

03. a) ஒரு 'பண்புடைத் தலைவர்' (Charismatic Leader) என்பவர் யார்? நிஜ உலக உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக. (03 புள்ளிகள்)

b) தலைமைத்துவத்தின் பண்புக் அணுகுமுறை கோட்பாட்டின் கீழ் அடையாளம் காணப்பட்ட மூன்று (03) தனிப்பட்ட பண்புகளை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

c) வேலைத்தளத்தில் நாம் ஏன் ஊழியர்களை ஊக்குவிக்க வேண்டும்? மூன்று (03) காரணங்களை குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

d) உங்கள் பட்டப்படிப்பின் மட்டம் மூன்றின் தேர்வுகளை முடித்த பிறகு ஒரு சிறிய மூலிகை உற்பத்தி வணிகத்தைத் தொடங்க எதிர்பார்க்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் வணிகத்தைத் தொடங்கும்போது நல்ல தீர்மானங்களை எடுப்பது ஏன் முக்கியம் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

04. a) 'தொடர்பாடல் செயன்முறை' எனும் எண்ணக்கருவை விளக்குக. (03 புள்ளிகள்)

b) திறனாற்றுள்ள தொடர்பாடலை பாதிக்கும் நான்கு (04) முக்கிய காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

c) ஒரு முகாமையாளருக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான தொடர்பாடல் ஆற்றல்களை விளக்குக. (06 புள்ளிகள்)

d) வினைத்திறனான மனித வள திட்டமிடல் (Human Resource Planning -HRP) எவ்வாறு வளர்ந்து வரும் நிறுவனங்களுக்கு ஊழியர் தொடர்பான சவால்களை முகாமைத்துவம் செய்ய உதவுகிறது? பொருத்தமான உதாரணங்களுடன் உங்கள் விடையை விளக்குக. (10 புள்ளிகள்)

05. சிறுகுறிப்பு எழுதுக

a) விஞ்ஞான அணுகுமுறை முகாமைத்துவம் (Management Science Approach)

b) சமூகப் பொறுப்பு (Social Responsibility)

c) செயற்பாட்டு முகாமைத்துவம் (Operations Management)

d) தொடர்பாடல் வலைப்பின்னல் (Communication Network)

e) கட்டுப்பட்டுச் செயன்முறை (Control Process)

(05 x 05 புள்ளிகள் = 25 புள்ளிகள்)

-பதிப்புரிமைக்குரியது-